

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.04.2025) செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.1,882 கோடி முதலீட்டில் 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிஃபி நிறுவனம், சிப்காட் – சிறுசேரி தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்துள்ள தரவு மையத்தை ரிப்பன் வெட்டி திறந்துவைத்து – அதனை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருண்ராஜ், சிஃபி டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜு வெஜேஸ்னா, செயல் இயக்குநர் விஜயகுமார், நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.04.2025) செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1,882 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிஃபி நிறுவனம், சிப்காட் – சிறுசேரி தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், சிஃபி டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜு வெஜேஸ்னா, செயல் இயக்குநர் விஜயகுமார், நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் கொண்டு வந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சட்ட முன்வடிவு!

## அமைச்சர் கீதாஜீவன் பதிலுரை 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதேபோன்று, அரசுப் பணிகளுக்கான TNPSC மற்றும் TRB போன்ற தேர்வுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கென நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் 4 சதவித இட ஒதுக்கீடு மூலம், கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 1,536 மாற்றுத் திறனாளிகள் அரசுப் பணிகளைப் பெற்றுள்ளனர் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**ஊக்கத் தொகை உயர்வு!**

மாற்றுத் திறனாளிகளின் மாதாந்திர உதவித் தொகையை அதிகப்படுத்திட, கடுமையான நிதி நெருக்கடியில் இருந்தபோதிலும், தாயுள்ளத்தோடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் தினமான டிசம்பர் 3 ஆம் தேதியன்று, கடுமையான இயலாமை, கடுமையான அறிவுசார் குறைபாடு, தசைச் சிதைவு போன்ற குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு 1,500/ ரூபாயினை 2,000/ ரூபாயாக உயர்த்தியதன்மூலம் 2,50,987 நபர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு வருவாய்த் துறைமூலம் ரூ.1,000/ என வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித் தொகை ரூ.1,500/ ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால் 5,34,976 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, Autism பாதிக்கப்பட்டவர்களுக்கும் மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையானது 5,081 நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களைசமுதாயத்தில்ஒருங்கிணைக்கும் பொருட்டு “மீண்டும் இல்லம்” என்னும் திட்டம் தகுதியான அரசுசாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் 3—12-2024 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளி

முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கான புதிய அறிவிப்புகளை இப்போது வெளியிடுகிறேன்.

**அறிவிப்புகள்**

1. தசைச் சிதைவு நோய் மற்றும் முதுகுத் தண்டுவட பாதிப்பால், கைகள் மற்றும் கால்கள் பாதிக்கப்பட்ட (Tetraplegic/Quadriplegic) மாற்றுத் திறனாளிகளுக்கு மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி (Battery Operated Wheel Chair) வழங்கும் திட்டத்தினை பிற வகையினால் கை மற்றும் கால்கள் பாதிக்கப்பட்டு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மற்றும் நீயோ போல்ட் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள 600 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.6.87 கோடி மதிப்பில் இத்திட்டம் விரிவுபடுத்தி வழங்கப்படும்

தற்பொழுது தசைச் சிதைவு நோய் மற்றும் முதுகுத் தண்டுவட பாதிப்பால், கைகள் மற்றும் கால்கள் இரண்டும் பாதிக்கப்பட்ட (Tetraplegic/Quadriplegic) மாற்றுத் திறனாளிகளுக்கு, மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வுபகரணம் தன்னிச்சையாக பிறர் உதவியின்றி நடமாட்டத்திற்கு பெரிதும் உதவியாக இருப்பதால், இத்திட்டத்தினை விரிவுபடுத்தி, 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இரண்டு கால்கள் மற்றும் கைகள் பாதிக்கப்பட்ட, மூளைமுடக்குவாதம், போலியோ, பக்கவாதம் மற்றும் நடுக்குவாதம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மற்றும் நீயோ போல்ட் போன்ற உபகரணங்களைப் பயன்

பாட்டினால் இரண்டு கால்கள் பாதிக்கப்பட்ட நடக்க இயலாத 18 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் வீட்டினுள்ளும் வெளியிலும் இயங்க உதவுவதற்கு மின்கலன் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி இணைக்கப்பட்ட நவீன மூன்று சக்கர வாகனம் ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

4. மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் மகள்/மகன் திருமணத்திற்கான உதவித்தொகையை ரூ.2,000/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்

முதல் 75 சதவிகிதத்திற்குமேல் அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளின் தாய்மார்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில், கடந்த 2009-2010 ஆம் நிதியாண்டு முதல் 2014-2015 ஆம் நிதியாண்டு வரை (பத்து வருடங்களுக்கு முன்புவரை) 9,960 மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வுபகரணம், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் உதவியாக இருப்பதால், பத்து வருடங்களுக்கு முன்பு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் பெற்ற பயனாளிகளின் உபகரணங்கள் பழுதடைந்து, அவர்கள் விண்

செய்து பெற்று, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளும் உதவி உபகரணங்களைப் பெறுவதில் தன்னிறைவு அடையும் நிலைக்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

சுமார் 3 மாதகால அளவில் 99 மாநகராட்சி மண்டலங்கள், 138 நகராட்சிகள், 388 ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட்ட பகுதிகளில் 625 முகாம்கள் நடத்தப்படும்.

எனவே, இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட வாரியாகவும், ஊராட்சி, ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சி, மண்டல வாரியாக அனைத்துத் தரப்பு அரசு மற்றும் அரசு சாரா நிறுவ

கோடி மதிப்பில் உபகரணங்கள் வழங்கும் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சமூக சீர்திருத்தத் துறை, மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளுக்கு ஊக்கமளித்து, நல்ல ஆலோசனைகளை வழங்கிவரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அரசுச் செயலர் திருமதி ஜெய்ரீ முரளிதரன், , சமூக நல ஆணையர் திருமதி லில்லி, , ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டக் குழும இயக்குநர் திருமதி ஐ.சா. மெர்சி ரம்யா,, குழந்தை நலன் மற்றம் சிறப்பு துறையினுடைய ஜானி டாம் வர்கீஸ், மாற்றுத் திறனாளித் துறையினுடைய அரசுச் செயலாளர் திருமதி மதுமதி, மாற்றுத் திறனாளி நலத் துறை இயக்குநர் திருமதி லட்சுமி, சமூக சீர்திருத்தத் துறை அரசு கூடுதல் செயலாளர் T.S. ஜவஹர் ஆகியோருக்கும் மற்றும் துறையினுடைய ஏனைய அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் தங்களுடைய அறிய கருத்துகளை எடுத்து வைத்துள்ளீர்கள். வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளீர்கள். உங்களுடைய மேலான கருத்துகளையும் நல் ஆலோசனைகளையும் கவனத்தில் கொண்டு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் சமூக சீர்திருத்தத் துறை மேன்மேலும் சிறப்பான முறையில் செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய மானிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் பதிலுரை வழங்கினார்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு திருக்கோயில்களில் இலவச திருமணம்!

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் 2007 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு வாரிய உறுப்பினர்களுக்கும், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2023-2024 ஆம் நிதியாண்டில் இவ்வாரியத்திற்கான கல்வி உதவித் தொகை, மருத்துவம், விபத்து மரணம் ஆகியவற்றின் உதவித்தொகை உயர்த்தப்பட்டடு, கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.200.00 இலட்சம் ஒதுக்கியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது, இவ்வாரியத்தின் திட்டங்களை மேம்படுத்தும் நடவடிக்கையாக மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்களின் மகள்/மகன் திருமணத்திற்கான உதவித் தொகையை ரூ.2,000/லிருந்து ரூ.5,000/

ணப்பிக்கும்பட்சத்தில், பழுதடைந்த உபகரணத்திற்கு மாற்றாக ஒவ்வோர் ஆண்டும் கொள்முதல் செய்யப்படும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களில் 25 சதவிகிதம், 2025-2026 ஆம் நிதியாண்டு முதல் புதிதாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு வழங்கப்படும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களுக்கான செலவினம், இவ்வுபகரணத்திற்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டிற்குள் வழங்கப்படும்.

8. மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் மேற்கொள்வதற்காக செயல்படுத்தப்படும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machines) வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி 40 சதவிகிதத்திற்குமேல் பாதிப்பிற்குட்பட்ட மூளை முடக்குவாதம், தசைச்சிதைவு நோய், புறஉலக சிந்தனையற்ற/மதிஇறுக்கம் ஆகிய 2,000 மாற்றுத் திறனாளிகள் அல்லது பெற்றோர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். அவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.30 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்

னங்களின் பிரதிநிதிகளுடன் குழு ஏற்படுத்தி முகாம் நடத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறையின் களப் பணியாளர்கள்மூலம் முகாம் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டு, மிகவும் இயலாதவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டு, முகாமிற்கு வரவழைக்கப்படுவார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கு முகாமிலேயே உபகரணங்கள் பொருத்துவதற்கான அளவீடு செய்தும், தேவையானவற்றை தெரிவு செய்ய உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டும், இணையதளம்மூலம் தெரியப்படுத்தி, பதிவேற்றம் செய்து முகாம் முடிந்த 3 மாதத்திற்குள் இருப்பிடத்திலேயே வழங்கப்படும். இம்முகாமில், முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தில் பட்டியலிடப்பட்ட முகமைகள், அலிம்கோ நிறுவனமும் பங்கு கொண்டு உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும்.

இதற்காக ரூ.125 கோடி மதிப்பீட்டில் உபகரணங்கள் உட்பட மொத்தம் ரூ.131.25

## திருநங்கைகளுக்கான ‘அரண்’ - தங்கும் இல்லங்கள்!

மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை இருமடங்காக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அதுபோல, தமிழ்நாடு அரசின் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்க மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்மூலம் நடத்தப்படுகிறது. தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாகவும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. கை, கால் மற்றும் செவித்திறன் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கு Multimedia and Digital photography பயிற்சியானது ஆண்டுக்கு 250 நபர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

**வரலாற்று முன் வடிவு!**

இந்த அனைத்துத் திட்டங்களுக்கும் முத்தாய்ப்பாக மாநிலத்தில் உள்ள அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் அதாவது, 14,068 இடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்பதற்காக இன்று நம்முடைய தளபதியார் அவர்களால் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நாள் இந்த சபைக்கு மட்டுமல்லாமல் மாற்றுத் திறனாளிகள் அத்துணைப் பேருக்கும் வரலாற்று சிறப்புடைய நாள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வகையான உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத் திறனாளிகள் நியமன உறுப்பினர்களாக வாய்ப்பு வழங்கும் சட்டமுன்வடிவு கொண்டு வந்ததன்மூலம் மாற்றுத் திறனாளிகளின் உரிமை நிலைநாட்டப் பட்டுள்ளது; சம வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற கொள்கைக்கேற்ப திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு, மாற்றுத் திறனாளி நல வாரியத் தலைவர் என்ற முறையில் அத்துனை மாற்றுத் திறனாளிகளின் சார்பில் நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

‘ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்பது போல்’, மாற்றுத் திறனாளிகளின் சிரிப்பில் கலைஞர் அவர்களை காணும் நமது முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இத்துறை மேலும் மாற்றுத் திறனாளிகளின் உரிமை மற்றும் நலனுக்காக தொடர்ந்து பல முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் எனக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

படுத்த இயலாத நிலையிலுள்ள மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்.

2. தசைச் சிதைவு நோய், முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் மற்றும் பல்வகைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு, இயற்கை உபாதைகளை கழிக்கும் வகையிலான சக்கர நாற்காலி (Commode Wheel Chair) வழங்கும் திட்டம் 1,000 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.1.20 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்

தசைச் சிதைவு நோய், முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் மற்றும் பல்வகைக் குறைபாடுடன் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள், சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே, இயற்கை உபாதைகளைக் கழிக்கும் வசதியுடன்கூடிய ரூ.12,000/ மதிப்புள்ள மடக்கு சக்கர நாற்காலிகள், முதற்கட்டமாக ரூ.120.00 இலட்சம் மதிப்பில்

1,000 பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள், இவ்வுபகரணத்தில் அமர்ந்த நிலையிலேயே குளியலறை மற்றும் கழிப்பறைக்கு தன்னிச்சையாக செல்ல இயலும் என்பதால், இவ்வுபகரணம் மாற்றுத் திறனாளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

3. மூளை முடக்குவாதம் (Cerebral Palsy) உள்ளிட்ட இதர குறைபாட்டினால் இரண்டு கால்கள் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கு மின்கலன் பொருந்திய சக்கர நாற்காலியாகவும், மூன்று சக்கர வாகனமாகவும் பயன்படுத்தக்கூடிய இணைக்கும் வசதி கொண்ட மின்கலனால் இயங்கும் உபகரணம் (Attached Wheel Chair with Electric Equipment (Neobolt)) 600 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.6.30 கோடி மதிப்பில் வழங்கப்படும்

தசைச்சிதைவு நோய் மற்றும் முதுகுத் தண்டுவட பாதிப்பால், கைகள் மற்றும் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின்கீழ், மாற்றுத் திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களின் வகை மற்றும் மாதிரியை, தாங்களே தேர்வு செய்யும் முறையில் (Choice Based System), சக்கர நாற்காலியாகவும், மூன்று சக்கர வாகனமாகவும் பயன்படுத்தக்கூடிய இணைக்கும் வசதி கொண்ட மின்கலனால் இயங்கும் உபகரணம் (Attached Wheel Chair with Electric Equipment (Neobolt)) 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதனை விரிவுபடுத்தி மூளை முடக்குவாதம் (Cerebral Palsy) உள்ளிட்ட இதர குறை

ஆக உயர்த்தி வழங்கப்படும்.

5. மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகையை ரூ,17,000/லிருந்து ரூ.30,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும்

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் 2007 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு வாரிய உறுப்பினர்களுக்கும், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2023-2024 ஆம் நிதியாண்டில் இவ்வாரியத்திற்கான கல்வி உதவித் தொகை, மருத்துவம், விபத்து மரணம் ஆகியவற்றுக்கான காப்பீட்டுத் தொகை ஆகியவற்றை உயர்த்தியும், கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உறுப்பினர்கள் இயற்கை மரணத்திற்கும், ஈமச்சடங்கிற்காகவும் வழங்கப்படும் உதவித்தொகை ரூ.17,000/லிருந்து ரூ.30,000/ ஆக உயர்த்தப்படும்.

6. அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் வழங்குவதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள கூடுதலாக சேவை நிறுவனம் ரூ.86.00 இலட்சம் செலவில் ஈடுபடுத்தப்படும்

அனைத்து அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் சிறப்பு மருத்துவர்கள்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் “மாற்றுத் திறனாளி” என்பதற்கான சான்றிதழ் மற்றும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID) ஆகியவற்றை வழங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்கெனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அதனை துரிதப்படுத்தும் நோக்கில் ஒப்பந்த முறையில் ஆண்டிற்கு ரூ.86.00 இலட்சம் செலவில் சேவை வழங்கும் நிறுவனம் ஈடுபடுத்தப்படும்.

7. பத்து வருடங்களுக்கு முன்னர் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machines) பெற்ற பயனாளிகளுக்கு மீண்டும் புதிய மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்

2009-2010 ஆம் நிதியாண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும், இயக்க மாற்றுத் திறனாளிகள் மற்றும் செவித்திறன் மாற்றுத் திறனாளிகளுக்கு, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், இத்திட்டத்தை மேலும் விரிவு படுத்தி

கடந்த 2018-2019 ஆம் நிதியாண்டு

மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் செய்து தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள உதவும் வகையில், இயக்க மாற்றுத் திறனாளிகள், செவித்திறன் மாற்றுத் திறனாளிகள், அறிவுசார் மாற்றுத் திறனாளிகள் மற்றும் 75 சதவிகிதத்திற்குமேல் அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளின் தாய்மார்களுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, 2025-2026 ஆம் நிதியாண்டு முதல் 40 சதவிகிதத்திற்குமேல் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோரின் பெற்றோர்/பாதுகாவலர், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்/பாதுகாவலர் மற்றும் புறஉலக சிந்தனையற்ற/ மதிஇறுக்கம் குறைபாடுடையோரின் பெற்றோர்/ பாதுகாவலர் ஆகியோர்களுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

9. மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்கள்மூலம் மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உதவி உபகரணங்கள் பெறுவதில் தன்னிறைவு அடையும் திட்டம் ரூ.131.25 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்

தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிநவீன மற்றும் உயர் ரக உதவி உபகரணங்கள் வழங்கி இந்தியாவிலேயே முன்மாதிரியாக செயல்படுகிறது. இவ்வுபகரணங்கள், மாற்றுத் திறனாளிகள் தன்னிச்சையாக செயல்பட உதவுகின்றன.

இந்நிலையில், கடைகோடியில் கிராம த்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளும் தங்களுக்குத் தேவையான உயர் ரக உதவி உபகரணங்களை, தங்களின் தகுதிக்கு ஏற்றவாறு விரும்பும் மாதிரியை தெரிவு

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ். பாண்டியன்

ஏப்ரல் 18 (2019)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் அணியிலும், பின்னர் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னர் மாவட்ட வழக்கறிஞர் அணியிலும் பணியாற்றினார்.

மதுரை மாநகர் மாவட்டம், காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.